எப்பவும் நினைச்சா நா, நாம் நெறஞ்சி போயிடறோம். நம்ப நிறையனும். நம்ப துக்கங்கள்ளா நிவர்த்தி ஆகனும். அதுக்கு அப்பேற்பட்ட ஒரு ஸகல துக்கத்துக்கும் அதூதமாகவும், எல்லா பாபத்துக்கும் மேற்பட்டவனாகவும், எது வந்தாலும் அதுல சலனமற்றவனாகவும், அதனால தான் ஈ◌ீவரனுக்கும் நமக்கும் வேலயே தவிர அதில்லாம ஜகத் கர்த்தான்னோ, நம்ம பயமுறுத்தறவன்னோ, பாக்கி இருக்கும்படியான ரக்ஷிக்கிறவன்னோ , பரிபாலனம் பண்றவன்னோ, அது அவன் கார்யம் அவன் பண்ணிட்டுப் போறான் அவன் அது பாட்டுக்கும். நமக்கு அதுல எல்லாம் வேல இல்ல. அது இப்படி மாத்தினா என்ன, அப்படி மாத்தினா என்ன, அதென்ன, அதிலென்ன இப்படி ஒரு தினுசா நடக்கறது, இன்னொரு தினுசா நடக்கறது அவ்வளவு தான் இன்னொரு காரியம் , இன்னொரு காரியம். அது எப்படி இருந்தா என்ன, அவன் இஷ்டப் படி நடந்துட்டுப் போட்டும் அதுக்கு. அதுக்கு நம்ம காரியம் வேண்டியதில்ல.

அதனால பகவானிடத்தில ஒரு நல்ல காரியத்துக்காக போய் ப்ரார்த்தனை பண்றதே கூட ஒரு மூடத்தனம் தான்னு கடைசில, கடைசில முடியறது. என்ன மூடத்தனம்?

அவனிடத்துல ப்ரார்த்தனை பண்ணாத்தான் நமக்கு அவன் அநுக்ரஹம் பண்ணுவான் அப்படின்னு சொன்னா, அவனுக்கு ஒண்ணு, நம்ம கஷ்டங்கள்ளா அவனுக்கு தெரியாம இருக்கனும். நாம் போய் சொன்னா தான் அவனுக்கு தெரியும், அப்படின்னு அவன் எல்லாத்தையும் அறிஞ்சவன்ங்கறத கொஞ்சம் குறைக்கறோம். அப்படி எல்லாம் தெரிஞ்சுண்டிருக்கான் அவன், ஆனாலும் கருணையில்ல அவனுக்கு. நாம் கொஞ்சம் அப்பாவியா, இல்லியானு தெரிஞ்சுண்டா தான் கொஞ்சம் கருணை உண்டாகும் அவனுக்கு. அதனால கருணா ஸமுத்ரம் இல்ல அவன். கொஞ்சம் ஆர் கிட்ட வரானோ அதனால தன்னுடைய புகழ்ச்சிக்கு ஆசைப்பட்டவன் அவன். கற்புக்கு அப்பவும் ஒரு குறை தான் அவனுக்கு. ஒண்ணு க கருணா ஸமுத்ரமாவும் இருந்து ஞான ஸமுத்ரமாவும் இருந்தான், “ஸர்வஞ்ஞஸ்ய, தயாகரஸ்ய” தயத்திலியும் ஸமுத்ரனா இருந்து அறிவுக்கும் ஸர்வஞ்ஞனா இருந்தான்னா அப்புறம் அவனண்ட போய் நாம் சொல்வானேன்? அவன் அப்படி ஒத்தன் இருந்தான்னா, அப்படி ஒத்தன் இருக்கறது, அப்படி ஒத்தன் இருந்தாத்தான் ஈ◌ீவரன்னு பேர் அவனுக்கு. அப்படி ஒத்தன் இல்லாது போனா இவ்வளவு பிரபஞ்சமும் இருக்கவும் இருக்காது. அப்பேற்பட்ட நித்யம் அவன். ஆகையினால நாம் போய் அவனண்ட ஒரு காரியம்

நமக்கு கிடையாது. ஆக நூங்க காரியத்துக்காக அவனண்ட போகவே வேண்டியதில்ல. காரியத்துக்காக நாம் போகணும்னா ஒண்ணு அவனுக்கு விவேகமில்லாதவன். இல்லாத போனா சில விஷயங்கள் அவனுக்கு தெரியவும் தெரியாது. அப்ப அவன் ஈ□◌்வரனே இல்ல, அப்ப சரியாப் போச்சு. அதனால காரியத்துக்குக்காக அவனண்ட போய் நமக்கு வேலயே கிடையாதுன்னு தான் பரம ஸித்தாந்தம். ஆனாலும் எல்லாரும் ப்ரார்த்திக்கிறாளே. ப்ரார்த்திக்கிறது எதுக்காகனு கேட்டா, வேற கண்டவன் கிட்ட போய் ப்ரார்த்திச்சிண்டுருக்கரத்துக்கு அவனண்டயாவது ப்ரார்த்திச்சிடுவோம். உறவா இருக்கிறவன் கிட்டயாவது போய் ப்ரார்த்திச்சுண்டுருக்கட்டுமே அவன். ஊர்ல இருக்கிறவன் கிட்டெல்லாம் போய் ப்ரார்த்திச்சிண்டு, அது பண்ணி, இது பண்ணி ஒண்ணும் வெளங்காம இருக்கறப்போ, எவன் நமக்கினி வாஸ்தவமான பந்துவோ அவனண்டையாவது போய் ப்ரார்த்திக்கிறானே , ஆகையினால அவனுக்கு இவன் தேவலைங்கறத்துக்காக போனா போறதுனு tolerate பண்ணனுமே தவிர இந்த ப்ரார்த்தனைய, இல்லாப் போனா ப்ரார்த்தனை பண்ண வேண்டிய அவசியமே கிடையாது.

ஆகையினால இந்த ப்ரார்த்தனைக்காகவே அவன் எவ்வளவு அப்படி, அவனுடைய ஸங்கல்பம் எப்படியோ நடந்துட்டு போறது.அவனண்ட போய் சொல்லுவானே இப்போ? அவனுக்கு தெரியாதா என்ன? நமக்கு நல்லது, கெட்டது எதுனுட்டு. என்ன இந்த நெலமக்கு நாம ஏதோ கேட்டு அப்படி வை, இப்படி வைங்கறோம். எனக்கு அத குடு, இத குடு, இப்படி வைக்காத, அப்படி வைக்காதங்கறோம். இது தான் என்ன □◌ா□◌்வதம் அப்படி மாத்தறா, நம்ப இஷ்டப்படி தான் மாத்தறான்னு வெச்சுக்கோங்கோ ஸ்வாமி அது தான் எத்தன நாழி நிக்கப் போறது? அதுவும் போயிடப் போறது. என்னென்னமோ மாறுதல்கள் ஏற்படப் போறது இதுல, இது அப்படியிருக்கறத்துக்கு இப்படி தான் இருந்துட்டு போகட்டுமே. நம்ப பணக்காரனாவே , நம்ப கஷ்டத்த நிவர்த்தி பண்ணுன்னா இன்னும் ஊர்ல உள்ளவன் எத்தனையோ பேர் ஏழையா இருக்கான், அத்தனை பேருடைய இதும்னா, அவன் அத்தன பேரையும்னா பணக்காரனாக்கி நம்பளுக்கு தரணும்? இத்தன பேரையும் பணக்கார ராஜ்யம் பண்றத்துக்கு ஊர்ல எந்த ராஜாங்கத்துனாலயும் முடியாது ஸ்வாமியண்டயும் இருக்கறதும் அதுவும் சந்தேகம் தான். ஆகையினால இத்தனை பேரையும் பணக்காரனா பண்ணி வைக்கிறத்துக்கு. ஆகையால் நம்ம மாத்திரம் பணக்காரனாகி, நமக்கு மாத்திரம் வரவு வரட்டும்னு நாம கேட்டுக்கிறோம். நம்ப துக்கம், நம்ப தரித்திரம். உலகத்துல இன்னும் நம்ம காட்டிலும் இத்தன

பேர் இருக்கானே, இத்தன பேரையும் அவனுக்கு பண்ண முடிஞ்சா தானே நம்மையும் பண்ண முடியும். அப்படின்னு அதுவும் யோசிக்கணும். இது இதெல்லாம் நிறைய இருக்கு சமாஜாரங்கள்.

அது ஒரு பக்கம் இருக்கட்டும். அப்படி அவன் பண்ணினாலும் அது இன்னும் ஆ, அதென்ன அப்படி தான் இருப்பானே, இப்படித்தான் இருந்துட்டு போட்டுமே. யாரோ ஒத்தன் கஷ்டப் படனும், நாம தான் கஷ்டப் பட்டு போவோமே அது ஸ்வாமியுடைய ஸங்கல்பம் யா, எவனோ ஒத்தன் பெரிய்ய நல்ல ஸ்திதில இருக்கானே அவன் நல்ல ஸ்திதில , அவன் கேட்டா வந்தது. என்னமோ அவனுக்கு வாய்ச்சது அந்த மாதிரி. இவனுக்கு இப்படி வாய்ச்சிருக்கு. அவனுக்கு அப்படி வாய்ச்சிருக்கு. இன்னும் மாத்தினா அவன் அப்படி ஆயிடறான். இவன் இப்படி ஆயிடறான். அதான் ஓரிடத்துல மேடு கட்டினா இன்னொரு இடம் பள்ளமா ஆகணும். ஆகையினால இந்த பள்ளம் மோடாகணும்னா, இது இன்னொரு எடத்தில பள்ளம் பண்ணியாகணும். ஏதாவது ஒண்ணு பண்ணியாகணும் அது. ஆகையினால உலகத்தில இது மாதிரியா தான் இருக்கும். ஆகையினால இதுக்கெல்லாம் ஒண்ணும் ஸ்வாமியண்ட போய் ப்ரார்த்திக்கறத்துக்கு அர்த்தமே கிடையாது, அப்படின்னுட்டு அதத்தான் “ஆனந்தஸாகரஸ்தவம்”னு மீனாக்ஷி அம்பாளிடத்தில நீலகண்ட தீக்ஷிதர்னு ஸ்லோகம் சொல்றப்போ முதல்ல அதான் சொல்றார்.

**“ஆவேத்₃யதாம் அவிதி₃தம் கிம், ஆவேத்₃யதாம்”** அம்பாளிடத்தில போய் முதல்ல ப்ரார்த்திச்சவுடன முதல்ல ப்ரார்த்தனை இது தான், ஸ்லோகம். **“ஆவேத்₃யதாம்”** உன்னண்ட என்னமோ எனக்கு தெரிவிக்கணும்னு அபிப்ராயம் இருக்கே. உன்னண்ட தெரிவிக்கிறதுனு அபிப்ராயம் இருக்குன்னா, அதுலயே ஒண்ணு எனக்கு அந்த அபிப்ராயம் வரப்பவே ஒரு implication வேண்டுருக்கு. உனக்கு சில சமாஜாரம் தெரியாது. **“அவிதி₃தம் கிம்”** பின்ன ஸ்வாமியண்ட, அம்பாளிடத்தில எதுக்காக ப்ரார்த்தனை பண்ணப் போறேன், ஸ்தோத்ரங்கள்ளாம் ஏன் பண்ணப் போறேன் நான்? **“அதா₂பி”** இருந்தாலும், உனக்கு தெரியாதது இல்ல தான், **“அவிதி₃தம் கிம்”** உனக்கு தெரியாதது என்ன இருக்கு? வாஸ்தவம் தான், இல்லாது போனாலும், **“அதா₂பி”** இருந்தாலும் நா சொல்ல வந்ததெல்லாம், தோணத் தான் தோணறதே, ஏன் என்னத்துக்குடா சொல்லனும் **“அதா₂பி அருக்தம் வக்தவ்யம்”** என்னமோ ஒண்ணு சொல்லனும்னு நெனச்சுட்டா, அது சொல்லாம இருந்துட்டோமானா உள்ள என்னமோ பண்றது, கொடையறது. **“ஆவேத்₃யதாம்”** னுக்கு, உனக்கு தெரிவிக்கணும் ஒண்ணுமில்லைனா.**“அவிதி₃தம் கிம் ”....**, அப்ப எனக்கு தெரியாதுன்னு தீர்மானம்

தான உனக்கு, இல்லல்ல, **அதா2பி,** அதில்ல, உனக்கு தெரிய வேண்டிய விஷயம் அந்த சமாஜாரமே இல்ல உனக்கு. அதப் பத்தி யோஜிக்கவே இல்ல நான். “**அநுக்தம் வக்தவ்யம்**” **வக்தவ்யம்** னு வந்து நின்னுட்டு, **அநுக்தம்** சொல்லாம இருந்துட்டோமானா “**ஆந்தரருஜோ**” உள்ள என்னமோ பண்றது அது, ஒரு பெரிய்ய ரோகமா வந்து பிடிக்கறது. உனக்கு சொல்லனும்னு நெனச்சேனே சொல்லலயே, சொல்லனும்னு நெனச்சேனே சொல்லலயே, சொல்லனும்னு நெனச்சேனே சொல்லலயேன்னுட்டு, “**ஆந்தரருஜோ உபமாய நாலம்**” அதுக்கு மனம் வரத்துக்கு சொல்லித் தான் ஆகணும். உள்ள என்னமோ வந்துட்டுதே அத நிவர்த்திக்கு ஆக வேணுமே தவிர, உனக்கு தெரியுமா, தெரியாதங்கற அந்த questionனே இப்ப arise ஆகல அந்த issueவே கிடையாது இப்ப அப்படின்னுட்டார். எனக்கு என்னமோ உள்ள பண்றது, அத சொல்லியாகணும்.

**ஆவேத்3யதாம் அவிதி3தம் கிம் அதா2பி அநுக்தம்**
**வக்தவ்யம் ஆந்தரருஜோ உபமாய நாலம் இத்யர்த்2யஸே**

அதனால ப்ரார்த்தனை பண்றேன். **கிம் அபி தத் ்ரவணே நிதா4தும்** என்னமோ ஒண்ணு சொல்றேன். அத கொஞ்சம் காதில போ, காதில போட்டுக்கணும். ரொம்ப ப்ரார்த்திச்சுக்கிறேன் நான்.

**இத்யர்த்2யஸே கிம் அபி தத் ்ரவணே நிதா4தும்**
**மாத: ப்ரஸீத3 மலயத்4வஜ-பாண்ட்3ய கன்யே**

மீனாக்ஷி அம்பாளிடத்துல

போயி இந்த மாதிரி ப்ரார்த்திச்சார் அவர்.

**आवेद्यताम् अविदितं किम् अथापि अनुक्तं**
**वक्तव्यम् आन्तररुज-उपशमाय नालम् ।**
**इत्यर्थ्यसे किमपि तत् श्रवणे निधातुं**
**मातः प्रसीद मलयध्वज-पाण्ड्य-कन्ये ॥**

**ஆவேத்3யதாம் அவிதி3தம் கிம் அதா2பி அநுக்தம்**
**வக்தவ்யம் ஆந்தருஜ-உப□மாய நாலம்**
**இத்யர்த்2யஸே கிமபி தத் □்ரவணே நிதா4தும்**
**மாத: ப்ரஸூத3 மலயத்4வஜ-பாண்ட்3ய-கன்யே**

அம்பாள் வந்து நமக்கு அநுக்ரஹம் பண்ணி நம்ப எல்லாரும் க்ஷேமமா ரக்ஷிப்பா.